# சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ சட்டகம்

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| **வளங்களை பிரித்தெடுத்தல்** | மண், உலோகம் போன்ற இயற்கை வளங்களை நிலத்தில் இருந்து எடுக்கும் போது தரைத்தோற்றத்தில் மாற்றங்கள் ஏற்படுவதுடன் அது சுற்றாடலின் தரத்தையும் பாதிக்கும். | (a) ICTAD வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும்<br>(b) அனைத்து மணல் மற்றும் இணைந்த திரள் ஆகியன அனுமதி பெற்ற இடங்களில் இருந்து மாத்திரம் பெறப்பட வேண்டும்.<br>(c) ஆற்றுப்படுக்கைகளுக்கு ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்காக இயன்றவரை கடற்கரை மணலை பயன்படுத்த வேண்டும். | ஒப்பந்தக்காரர் | ஒப்பந்தக்காரர் | ஒப்பந்தக்காரருக்கான கொடுப்பனவு | களப்பரிசோதனை |
| **நிலத்தை தயார்ப்படுத்தல்** | வெட்டுதல் மற்றும் நிரப்புதல் நடவடிக்கைகளினால் நீர் நிலைகளில் தடைகள் அல்லது அடைவுகள் ஏற்படலாம். நிரப்புவதற்கான மூலப்பொருட்கள் அனுமதி பெற்ற இடங்களில் இருந்து பெறப்படாவிட்டால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும். நிலம் மாசடைந்தால் அது உரிய முறையில் சுத்தப்படுத்தப்பட்டு தொற்று நீக்கப்படாவிட்டால் சுகாதார சீர்கேடுகள் மற்றும் நோய் காவிகள் பரவுதல் போன்ற பிரச்சனைகள் ஏற்படும். இதனால் குறித்த | (a) காணியை நிரவும் நடவடிக்கைகளின் போது சேற்றுப்படிவு பொறிகள் அல்லது உரிய பொருத்தமான நடவடிக்கைகள் ஆகியன கால்வாய் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>(b) நிர்மாண நடவடிக்கைகளிலான சிதைவுகளை கால்வாய் பகுதிகளில் கொட்டுவதை தவிர்க்க வேண்டும்.<br>(c) கால்வாய்களின் அணைக்கட்டுக்களை உயர்த்த வேண்டிய தேவையேற்படின் அத்தகைய நடவடிக்கைகள் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் துணையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>(d) நிரவுவதற்கான மூலப்பொருட்கள் அனுமதிப்பத்திரம் பெற்றவர்களிடமிருந்து பெறப்பட வேண்டும். அத்துடன் ICTAD வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சுற்றாடல் அலுவலகர்/ நிபுணர், ஒப்பந்த மேற்பார்வை ஆலோசகர் | செயற்த்திட்ட செலவு | நிர்மாண நடவடிக்கைகளின் போது வாராந்தம் |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | பகுதிகளில் தற்போது வசிக்கும் மற்றும் எதிர்காலத்தில் வசிக்க கூடிய சமூகத்தவர் பிரச்சனைகளை எதிர்நோக்குவர். | (e) காணிகளை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். சிதைவுகளை அகற்றுதல், ஆழமாக்குதல் மற்றும் ஆற்றுப்படுக்கைகளை சுத்தப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் கால்வாய்களை சுத்தப்படுத்த வேண்டும்.<br>(f) ஒலி மட்டங்களை கட்டுப்படுத்த உபகரணங்கள் உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அத்துடன் வாகன ஒலியை கட்டுப்படுத்த அமைவிட எல்லைகளில் வாகன ஒலி எழுப்புவதை தடைசெய்யும் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும். மேலும் ஒலியெழுப்ப கூடிய நடவடிக்கைகள் இரவு நேரங்களில் மேற்கொள்ளப்படுவது தடைசெய்யப்பட வேண்டும். | | | | |
| **குடிசார் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமுன்னர் சுற்றாடலின் அடிப்படை தன்மைகள்/நிலைமை தொடர்பில் ஆராய்தல்** | சுற்றாடல் தொடர்பான அடிப்படை தகவல்களை உரிய பிரதிநிதித்துவ முறைமையை பயன்படுத்தி சேகரித்துக்கொள்ளல். இத்தகவலை அடிப்படையாக கொண்டு சுற்றாடல் பாதிப்புக்கள் நியமங்களுடன் ஒப்பிடப்பட்டு மதிப்பிடப்படும். | (a) நிர்மாண நடவடிக்கைகளுக்கான பகுதி மற்றும் ஊழியர் தங்குமிடங்களுக்கான அமைவிடங்கள் ஆகியன உரிய முறையில் வலயப்படுத்தப்பட்டு, புகைப்படங்கள் மற்றும் நிலவியல் அமைவிட புள்ளிகளுடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இது செயற்திட்ட அமைவிட பகுதிகளிலேயே ஊழியர் தங்குமிட வசதிகள் வழங்கப்படும் அமைவிடங்களுக்கு மாத்திரமே பொருந்தும். | ஒப்பந்தக்காரர் | ஒப்பந்தக்காரர் / நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு | ஒப்பந்தக்காரரின் கட்டணம் | செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பமாகும் போது |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | செயற்த்திட்ட அமைவிட பகுதியில் சுமார் 100 சேரி வீடுகள் காணப்படுவதால் அவற்றிற்கு நிர்மாண நடவடிக்கைகளின் போதான அடித்தூண் மற்றும் அதிர்வு நடவடிக்கைகளால் பாதிப்பு ஏற்படும். | (b) சுற்றுச்சூழல் வளியின் தரம், நீரின் தரம் மற்றும் ஒலி மட்டம் ஆகியவற்றை கண்காணிப்பதற்கு அவசியமான அடிப்படை தகவல் சேகரிக்கப்பட வேண்டும். அத்துடன் குறித்த நீர் தர. சுற்றுச்சூழல் வளி மற்றும் ஒலி மட்ட கண்காணிப்பு நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பமாக முன்னரும் நிர்மாண நடவடிக்கைகளின் போதும் ஒவ்வொரு செயற்த்திட்டம் அல்லது உப செயற்த்திட்டங்களின் போது மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>(c) அருகிலுள்ள கட்டிடங்களின் கட்டமைப்புக்கள் மற்றும் அவற்றில் காணப்படும் பாதிப்புக்கள்/வெடிப்புக்கள் தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>(d) அருகில் காணப்படும் சேரிப்புற கட்டமைப்புக்கள் தொடர்பில் நிர்மாண நடவடிக்கைகளின் போது விசேட கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>(e) அத்துடன் குறைதீர்க்கும் பொறிமுறை அமைக்கப்பட்டு அனைவருக்கும் இலகுவில் அடைய கூடிய முறையில் ஏற்படுத்தப்பட வேண்டும். | | | | |
| **ஊழியர் தங்குமிடங்களை உருவாக்குதல்** | ஊழியர் தங்குமிடங்கள் உரிய வழிகாட்டுதலை பின்பற்றி அமைக்கப்படாவிடில் சூழல் மாசடைய கூடும். இதனால் | (a) ஊழியர் தங்குமிடங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் அனுமதியுடன் அமைக்கப்படுவதுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் | ஒப்பந்தக்காரர் | ஒப்பந்தக்காரர் / சுற்றாடல் அலுவலகர்/ நிபுணர், | ஒப்பந்தக்காரரின் கட்டணம் | தேவைக்கேற்ப |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| **ஊழியர் தங்குமிடங்கள் உருவாக்கப்படும் சந்தர்ப்பங்களுக்கு மட்டுமே பொருந்தும்** | ஊழியர்களுக்கு சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் ஏற்படக்கூடும். | உள்ளூராட்சி சபைகளின் வழிகாட்டிகள்/முன்மொழிவுகளுக்கமைய அமைக்கப்பட வேண்டும்.<br>(b) ICTAD வழிகாட்டிக்கமைய நிர்மாண முகாம்கள் அமைக்கப்படுவதுடன் ஊழியர் தங்குமிடங்கள் மற்றும் நிர்மாண உபகரணங்களை வைப்பதற்கான பகுதி ஆகியன அவசியமான இடவசதிகளுடன் அமைக்கப்பட வேண்டும்.<br>(c) முறையான குடிநீர், திண்மக்கழிவகற்றல் மற்றும் மலக்கழிவகற்றல் வசதிகள் நிர்மாண/ஊழியர் முகாம்களுக்கு வழங்கப்பட வேண்டும். | | | | |
| **வளப்பகிர்வு மற்றும் இட ஒதுக்கீடு** | நிர்மாண மூலப்பொருட்கள், ஊழியர் தங்குமிடங்கள் மற்றும் செயற்த்திட்ட அலுவலகம் ஆகியவற்றுக்கான இட ஒதுக்கீடு | (a) களஞ்சியப்படுத்தற் தேவைப்பாடுகளை குறைப்பதற்காக உள்ளூரில் கிடைக்க கூடிய மூலப்பொருட்களை பயன்படுத்தலாம்.<br>(b) நிர்மாண மூலப்பொருட்களை களஞ்சியப்படுத்தும் இடங்கள் வீதிகளில் இருந்து தொலைவில் அமைக்கப்பட வேண்டும். மணல், திரள்கள், உலோகங்கள் மற்றும் சீமேந்து ஆகியன இதில் உள்ளடங்கும். அத்துடன் சீமேந்து, உலோகங்கள், எண்ணெய் மற்றும் ஏனைய இரசாயன பொருட்கள் ஆகியன உரிய பாதுகாப்பு முறைகளுடன் களஞ்சியப்படுத்தப்பட்டு அவதானத்துடன் கையாளப்பட வேண்டும். அத்துடன் மழை நீரினால் | ஒப்பந்தக்காரர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சுற்றாடல் அலுவலகர்/ நிபுணர், | | நிர்மாண நடவடிக்கைகளின் போது |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | | பாதிப்பு ஏற்படாத வகையிலும் களஞ்சியப்படுத்தப்படுவதுடன் உரிய காற்றோட்ட வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.<br>(c) ஊழியர்கள் தங்குமிட தேவைப்பாடுகளை குறைப்பதற்காக இயன்றவரை உள்ளூரின் பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களை நிர்மாண நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டும். | | | | |
| **நிர்மாண நடவடிக்கைகளின் போது குடி நீரின் கிடைப்பனவு** | தொழிலாளர்களுக்கு உரிய குடிநீர் கிடைக்காத பட்சத்தில் உடல் வறட்சி மற்றும் சுகாதார பிரச்சனைகளுக்கு ஊழியர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் (இது விசேடமாக வறட்சியான காலப்பகுதியில் முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும்) | (a) குடி நீர் நம்பிக்கையான மூலத்தில் இருந்து பெறப்படுவதுடன் செயற்த்திட்ட அமைவிடத்திலும் உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.<br>(b) தொடர்ச்சியான தடையற்ற நீர் வழங்கலை உறுதி செய்யும் வகையில் உரிய அளவுடைய நீர்த்தாங்கியில் குடி நீர் சேமிக்கப்பட வேண்டும்.<br>(c) நிர்மாணம், மலசலகூட நடவடிக்கைகள் மற்றும் குடித்தல் ஆகியவற்றுக்கு அவசியமான நீரின் தொடர்ச்சியான வழங்கலை உறுதி செய்யும் திட்டத்தை ஒப்பந்தக்காரர் சமர்ப்பிக்க வேண்டும். நீர் செயற்த்திட்ட அமைவிடத்திற்கு வெளியில் உள்ள மூலத்தில் இருந்து நீர்த்தாங்கிகளில் எடுத்து வரப்படுமாயின் உரிய பதிவுகள் பேணப்பட வேண்டும் | ஒப்பந்தக்காரர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சுற்றாடல் அலுவலகர்/ நிபுணர், | | வாராந்த அடிப்படையில் . |
| **தூசு மற்றும் நிர்மாண நடவடிக்கைகளில்** | நிர்மாண நடவடிக்கைகள் காரணமாக ஏற்படக்கூடிய தூசு, களஞ்சியப்படுத்தப்பட்ட இடங்களில் இருந்து கரிமச் | (a) நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடத்தில் நீரை அடிக்கடி தெளித்து ஈரமாக | ஒப்பந்தக்காரர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் | | வாராந்த அடிப்படையில் |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| **பயன்படுத்தப்படும் உபகரணங்களின் வெளியிடுகைகள்** | சேர்மங்கள் ஆவியாதல், வாகன போக்குவரத்து, வாகன மற்றும் உபரகரணங்களுக்காக களஞ்சியப்படுத்தப்பட்ட எரிபொருளில் இருந்து வெளிவரக்கூடிய காபன் மொனொக்ஸைட் ஆகியன வளியின் தரத்தை பாதிக்கின்றன நிர்மாண நடவடிக்கைகளின் போது வெளியாகும் நைதரசன் டையொக்சைட் மற்றும் துகள்கள் மற்றும் வாகனங்களின் வெளிவிடுகைகள் ஆகியன தொழிலாளர்கள் மற்றும் அயலில் வசிப்போர் ஆகியோரின் சுகாதார நடவடிக்கைகளை பாதிக்கலாம். | பராமரிப்பதன் மூலம் தூசுகளை கட்டுப்படுத்தலாம்.<br>(b) நிர்மாண நடவடிக்கைகளுக்கு அவசியமான மூலப்பொருட்களை கொண்டு வரும் வாகனங்களுக்கு வேக கட்டுப்பாடுகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் தூசு வெளிவிடுகையை கட்டுப்படுத்தலாம்.<br>(c) நிர்மாண மூலப்பொருட்களை வாகனங்களில் இருந்து இறக்கும் போதும் ஏற்றும் போதும் தூசு வெளிவிடுகையை கட்டுப்படுத்த முற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் நிர்மாண பொருட்களை போக்குவரத்து செய்யும் போது உரிய முறையில் பாதுகாப்பாக மூடிய வகையில் போக்குவரத்து செய்யப்பட வேண்டும்.<br>(d) நிலத்தை நிரவும் நடவடிக்கைகள் தூசு வெளியிடுகையை கட்டுப்படுத்தும் முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>(e) நிர்மாண நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியன இலங்கை அரசாங்கத்தின் வாகன புகைப்பரிசோதனை நியமங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும். உபகரண வெளிவிடுகைகள் தேசிய | | சுற்றாடல் அலுவலகர்/ நிபுணர், | | |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | | சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியின் நியமங்களுக்கமைவாக காணப்பட வேண்டும்.<br>(f) வளி கண்காணிப்பு உலகவங்கியின் சுற்றாடல் மற்றும் சுகாதார பாதுகாப்பு நியமங்களுக்கமைவாக காணப்பட வேண்டும். | | | | |
| **ஒலி மாசடைதல்** | நிர்மாண நடவடிக்கைகள் மூலமான ஒலி சுற்றுச்சூழலை பாதிக்கலாம் | (a) அனைத்து இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியன உரிய தரத்துடன் பயிற்றப்பட்ட இயந்திரவியலாளர்களினால் பராமரிக்கப்பட வேண்டும். மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் 1996ஆம் ஆண்டு அதிவிசேட வர்த்தமானி இல 924/12 மூலம் வெளியிடப்பட்ட ஒலிக்கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் நொறுக்கிகள், நிர்மாண வாகனங்கள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தும் போது பின்பற்றப்பட வேண்டும்.<br>(b) அனைத்து வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்கு ஒலி உறிஞ்சி பொருத்தப்படுவதை ஒப்பந்தக்காரர் உறுதிப்படுத்த வேண்டும்.<br>(c) நொறுக்குதல், மின்பிறப்பாக்கி செயற்படல், அதிக ஒலி எழுப்பும் இயந்திட பாவனை ஆகிய ஒலி எழுப்ப கூடிய நிர்மாண நடவடிக்கைகள் பி.ப. 10:00 மணி முதல் மு.ப 6:00 மணி வரை மேற்கொள்ளப்பட கூடாது. | ஒப்பந்தக்காரர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சுற்றாடல் அலுவலகர்/ நிபுணர், | | நிர்மாண நடவடிக்கைகளின் ஆரம்பத்தின் போதும் பின்னர் மூன்று மாதங்களுக்கொரு தடவை |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | | (d) செயற்த்திட்ட அமைவிட எல்லைகளின் ஒலி மட்டங்கள் உலக வங்கியின் சுற்றாடல் மற்றும் சுகாதார பாதுகாப்பு நியமங்களுக்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். இது தேசிய சுற்றாடல் சட்ட நியமங்களின் கட்டுப்பாட்டை நீக்குகிறது. | | | | |
| **கழிவு நீர் மற்றும் மலக்கழிவு அகற்றுகை** | ஊழியர் முகாம்கள் மற்றும் மலசல கூடங்களில் இருந்து சுத்தப்படுத்தாத கழிவு நீர் வெளியேற்றப்படும் பட்சத்தில் சுற்றாடல் மாசடைதலுக்கு வழி வகுக்கும்.<br><br>சுத்தப்படுத்தப்படாத மலக்கழிவுகள் நில மேற்பரப்பு மற்றும் நிலக்கீழ் நீரை பாதிப்பதுடன் சுகாதார சீர்கேடுகளையும் உருவாக்கும். | (a) தற்காலிக கழிவு நீர் சேகரிப்பு தொட்டிகள் நிர்மாண கட்டத்தின் போது அமைக்கப்பட வேண்டும்.<br>(b) கழிவு நீரை சுற்றாடலுக்கு வெளியேற்றும் போது இலங்கை கட்டளை நிறுவகம் மற்றும் தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>(c) அடைக்கப்பட்ட தற்காலிக மலக்குழிகள் அமைக்கப்பட்டு அவை நிர்மாண நடவடிக்கைகளின் பின்னர் அகற்றப்பட வேண்டும். மலக்கழிவுகளை சுற்றாடலுக்கு வெளியேற்றும் போது உலகவங்கியின் சுற்றாடல் மற்றும் சுகாதார பாதுகாப்பு நியமங்களுக்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சுற்றாடல் அலுவலகர்/ நிபுணர், | | நிர்மாண நடவடிக்கைகளின் ஆரம்பத்தின் போது |
| **திண்மக்கழிவகற்றல்** | ஊழியர் தங்குமிடங்கள், அலுலவகர்களின் தங்குமிடங்கள் ஆகியவற்றில் இருந்து எழக்கூடிய கழிவுகளால் | (a) அனைத்து ஊழியர் தங்குமிடங்களுக்கும் கழிவகற்றும் தொட்டிகள் வழங்கப்பட வேண்டும். எவ்வித திண்மக்கழிவுகளும் நேரடியாக சுற்றாடலுக்கு அகற்றப்பட கூடாது. | ஒப்பந்தக்காரர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சுற்றாடல் அலுவலகர்/ | | வாராந்த அடிப்படையில் |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்புக்கள் ஏற்படுவதுடன் சூழலியல், பொது சுகாதாரம் மற்றும் அழகியல் ஆகியவற்றில் தாக்கங்கள் ஏற்படும். | (b) சுத்தப்படுத்தல் செயற்பாடுகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட வேண்டும். கழிவுகளை சேகரித்து வைத்துக்கொள்ளவென விசேட பகுதியொன்று ஒதுக்கப்பட வேண்டும். ஊழியர் தங்குமிட பகுதிகளுக்கு அண்மையில் நீர் தேங்கி நிற்பதை தடுப்பதற்கென வடிகாலமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.<br>(c) எச்சந்தர்ப்பத்திலும் திண்மக்கழிவுகள் எரிக்கப்பட கூடாது.<br>(d) செயற்த்திட்ட அமைவிட மறுசீரமைப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் அனுமதி பெறப்பட வேண்டும். செயற்த்திட்ட நிர்மாண நடவடிக்கைகளின் முடிவில் நிர்மாண கட்டத்தின் போது அமைக்கப்பட்ட அனைத்து தற்காலிக கட்டமைப்புக்களும் அகற்றப்பட வேண்டும். | | நிபுணர், | | |
| **நிர்மாண மூலப்பொருள் போக்குவரத்து** | மூலப்பொருட்களை வீதியால் போக்குவரத்து செய்யும் போது வழிப்பாதைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படலாம்.<br><br>நிர்மாண மூலப்பொருட் போக்குவரத்து, மற்றும் அவற்றை ஏற்றியிறக்கும் நடவடிக்கைகள், உலோக | (a) உள்ளூர் வீதிகளில் நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்களின் போக்குவரத்தை மேற்கொள்ள உள்ளூராட்சி சபைகளின் அனுமதியை ஒப்பந்தக்காரர் பெற்றுக்கொள்ள வேண்டும்.<br>(b) ICTAD நிறுவனத்தின் பெறப்பட்ட இடங்களின் செயற்பாட்டு மற்றும் மீளபிவிருத்தி தொடர்பான வழிகாட்டி மூலப்பொருட்களின் போக்குவரத்து | ஒப்பந்தக்காரர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சுற்றாடல் அலுவலகர்/ நிபுணர், | ஒப்பந்தக்காரரின் கட்டணம் | இரு வாரங்களுக்கு ஒரு தடவை |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | கம்பங்கள் மற்றும் பாரிய பொருட்களை கையாளும் நடவடிக்கைகள் போன்ற ஊழியர்களுக்கு காயங்களை ஏற்படுத்தலாம். அத்துடன் சுற்றுச்சூழலில் வசிப்பவர்களுக்கு அசௌகரியங்களும் ஏற்படலாம். | மற்றும் ஏற்றியிறக்கும் நடவடிக்கைகளின் போது பின்பற்றப்பட வேண்டும். | | | | |
| **ஊழியர்களின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு** | உரிய திட்டங்களின்மை ஊழியர்களின் உயிரிழப்பு மற்றும் செயற்த்திட்ட பொருளியற் செலவுகள் ஆகியவற்றை பாதிக்கும். | (a) சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் குழந்தை தொழிலாளர்கள் தொடர்பான 62, 138 மற்றும் 182 ஆவது சாசனங்கள் மற்றும் தொழிற்சாலை கட்டளை சட்டம் ஆகியவற்றை ஒப்பந்தக்காரர் கடைப்பிடிக்க வேண்டும்.<br>(b) முதலுதவி சிகிச்சை வசதிகள் உள்ளிட்ட தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டமொன்றை ஒப்பந்தக்காரர் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.<br>(c) மருத்துவ காப்புறுதி திட்டமொன்று தொழிலாளர்களுக்கென ஏற்படுத்தப்பட வேண்டும்.<br>(d) பொது சுகாதார உத்தியோகத்தர் மற்றும் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் அறிவுறுத்தலுக்கமைய டெங்கு நோய் பரவலுக்கெதிரான நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>(e) சீமேந்தினை கலத்தல், சுண்ணாம்புக்கலவை மற்றும் | ஒப்பந்தக்காரர் | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சுற்றாடல் அலுவலகர்/ நிபுணர், | ஒப்பந்தக்காரரின் கட்டணம் | இரு வாரங்களுக்கு ஒரு தடவை |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | | கொங்க்ரீட் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு கவசங்கள் அளிக்கப்பட வேண்டும். அத்துடன் உருக்கி ஒட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் உரிய பாதுகாப்பு கவசங்கள் அளிக்கப்பட வேண்டும்.<br>(f) நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயன பதார்த்தங்கள் உற்பத்தியாளரின் அறிவுறுத்தலுக்கமைய பயன்படுத்தப்பட வேண்டும். அத்துடன் செயற்த்திட்ட பகுதிக்கு கொண்டு வரப்பட்ட நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயன பதார்த்தங்கள் தொடர்பான பதிவேடு தயாரிக்கப்பட்டு பேணப்பட வேண்டும்.<br>(g) அனுமதி பெற்ற வாகன இயக்குனர்கள் பயன்படுத்தப்படுவதுடன் தொழிலாளர்களும் உரிய கடின தொப்பிகள், சப்பாத்துக்கள், கைக்கவசங்கள் மற்றும் உரிய ஆடைகள் அணிவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br>(h) பாதுகாப்பு தொடர்பான பொருத்தமான தொடர்பாடல் மற்றும் தகவல் பரிமாற்ற முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.<br>(i) நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதி உரிய முறையில் வேறுபடுத்தப்பட வேண்டும்.<br>(j) விபத்துக்களை குறைப்பதற்காக செயற்த்திட்ட பகுதி உரிய முறையில் ஒளிரூட்டப்பட வேண்டும். | | | | |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிபு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| **அரிய பொருட்கள் காணப்படல்** | எந்தவொரு கலாசார அல்லது சமய பொருட்களோ அல்லது கட்டமைப்புகளோ அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்டால் உரிய முற்காப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்படாவிட்டால் அவற்றிற்கு பாதிப்பு ஏற்படலாம்.<br><br>எனினும் குறித்த செயற்த்திட்ட பகுதி முன்னைய காலத்தில் சதுப்பு நிலமாக காணப்பட்டு 1990 காலப்பகுதிகளில் நிரவப்பட்ட காணியாக காணப்படுவதன் காரணமாகவும் அப்பகுதி கலாசார முக்கியத்துவாய்ந்த பகுதிக்குள் அமைந்திராமையின் காரணமாகவும் இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் கிடைப்பதற்கான சாத்தியம் குறைவாகவே காணப்படுகிறது. | (a) முக்கியத்துவம் வாய்ந்த அரிய பொருட்கள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் உடனடியாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அதன் பின்னர் முன்வைக்கப்படும் அறிவுறுத்தல்கள்/முன்மொழிவுகள் பின்பற்றப்பட வேண்டும்.<br>(b) அரிய பொருட்கள் கிடைக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பாக ஊழியர்களுக்கு அறிவிக்க வேண்டும். | ஒப்பந்தக்காரர் | ஒப்பந்தக்காரர் | | |
| **நில வடிவமைப்பு** | உரிய நிலவடிவமைப்பு மேற்கொள்ளப்படாவிட்டால் அழகுணர்ச்சியற்ற நிலை காணப்படும். அத்துடன் நிலவடிவமைப்பு சுற்றுப்புற | (a) நிலவடிவமைப்பு நடவடிக்கைகள் விரிவான வடிவமைப்பு வழிகாட்டிக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரர்/செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவு | செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவின் சுற்றாடல் அலுவலகர்/ | | நிர்மாண நடவடிக்கைகளின் இறுதிக்கட்டத்தின் போது |

| கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரச்சனைகள் | சுற்றாடல் மற்றும் சமூக பாதிப்பு | (a) தணிப்பு நடவடிக்கைகள் | நடைமுறைப்படுத்தும் தரப்பு | கண்காணிப்பு ஏற்பாடுகள் | செலவு மற்றும் நிதி மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | சூழலுக்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | (b) அமைவிட எல்லைப்பகுதி மற்றும் கால்வாய் பகுதியில் மரங்களை நாட்டுவதன் மூலம் பசுமையை பேணுதல்<br>(c) கட்டிடங்களுக்கும் வடிகாலமைப்பு கால்வாய்களுக்குமிடையில் இயன்றளவு அதிக இடைநிலை பகுதி பேணப்பட வேண்டும்.<br>(d) திறந்த பகுதிகளின் மேற்பரப்பை புற்களால் அமைப்பதுடன் மழைக்காலத்தில் நீரை உறுஞ்சும் வகையில் அவை வடிவமைக்கப்பட வேண்டும்.<br>(e) ஏற்கனவே அப்பிள்வத்த பகுதியில் அமைக்கப்பட்ட அடுக்குமாடி கட்டிடத்தொகுதியுடன் இணைந்ததான பொதுவான பொழுதுபோக்கு பகுதி ஏற்படுத்தப்பட வேண்டும். | | நிபுணர், | | |

**ICTAD- நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகம்*